## இனிவரும் 10 நாட்களும் தொடர்ந்து

# மக்களோடு மக்களாக நின்று களப்பணியாற்றிடுவீர்!

## கழகத்தினருக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அன்பு வேண்டுகோள்!

**சென்னை, ஏப். 13-**

**“இனி வரும் பத்து நாட்களும் மக்களோடு மக்களாக நின்று களப் பணியாற்றிடுவீர்” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத் தோழர்களுக்கு அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**இதுகுறித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-**

**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவனான என் அன்பு வேண்டுகோள்:**

2026 சட்டமன்றத் தேர்தல் வாக்குப் பதிவிற்கு இன்னும் பத்து நாட்களே உள்ளன. செல்லும் இடம் எங்கும் கழக உடன்பிறப்புகளின் எழுச்சியைக் காண்கிறேன். தமிழ்நாட்டு மக்களிடம் மகிழ்ச்சியைக் காண்கிறேன்.

ஐந்து ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் ஒவ்வொன்றும் மக்களுக்குத் தந்திருக்கக் கூடிய பயனும், தொடரவிருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் நாம் நிறைவேற்றவிருக்கும் சாதனைத் திட்டங்களின் மீதான மக்களின் எதிர்பார்ப்பும் அனைத்து தொகுதிகளிலும் வெளிப்படுகிறது.

தேர்தல் களத்தில் திமுக தொண்டர்களின் பணி என்பது எதிரிகளாலும் வியந்து பார்க்கக் கூடியது என்பதே நம் வரலாறு. கடந்த ஓராண்டுக்கு மேலாக தமிழ்நாட்டில் உள்ள 75,000 பாகங்களிலும் கழக உடன்பிறப்புகள் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து வந்திருக்கிறார்கள். மக்களுடனான நம் உறவு எப்போதும் தொடர வேண்டும். குறிப்பாக இனிவரும் 10 நாட்களும் மக்களோடு மக்களாக உடன்பிறப்புகள் களப்பணி ஆற்ற வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் வீடு வீடாக சென்று துண்டறிக்கைகளை வழங்கி வாக்குகளைச் சேகரிப்பதில் முழுமையான கவனம் செலுத்துவதுடன், கூட்டணிக் கட்சியினர் போட்டியிடும் தொகுதிகளிலும் உங்களில் ஒருவனான நானே நிற்கிறேன் என்ற எண்ணத்துடன் களப் பணியாற்றி வெற்றியை உறுதி செய்ய



வேண்டும்.

**80 வயதை தாண்டிய அண்ணன் சிதம்பரம், வைகோ, துரைமுருகன் மூலைமுடுக்கெல்லாம் பரப்புரை!**

92 வயது நிறைந்த திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி அவர்கள் கடும் வெயிலிலும் பரப்புரை செய்கிறார். அகவை 80ஐ தாண்டிய அண்ணன் சிதம்பரமும், அண்ணன் வைகோவும் மூலை முடுக்கெல்லாம் திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைய வேண்டும் என்பதன் அருமையை விளக்கி வருகின்றனர்.

87 வயதான நம் கழகப் பொதுச் செயலாளர் அன்பு அண்ணன் துரைமுருகன் அவர்களும், 28 வயதே ஆன அவிநாசி கழக வேட்பாளர் டாக்டர் கோகிலாமணியும் பம்பரமாகக் களத்தில் சுழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக கழகத்தினரும் தோழமைக் கட்சியினரும் பணியாற்றி வருகிறார்கள்.

**உடன்பிறப்புகளான உங்களின் உழைப்பின் மீது உள்ள நம்பிக்கையில் உறுதியுடன் சொல்கிறேன், இந்த தேர்தல் களத்தில் நாம்தான் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைப்போம். இதை மக்கள் முடிவு செய்து விட்டார்கள். குறிப்பாகத் தமிழ்நாட்டு பெண்கள் முகத்தில் வெளிப்படும் மலர்ச்சியும், இளைஞர்களின் மனதில் உள்ள நம்பிக்கையும், சிறுபான்மைச் சமுதாயத்தினர் உள்ளிட்ட அனைத்து மக்களின் ஆதரவும் நமது வெற்றிக்கு அடித்தளமாக உள்ளன. வாக்குப்பதிவு நாளில் அதை வெற்றியாகக் கட்டி எழுப்ப வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.**

முற்றிய நெற்கதிரைக் கவனமாக அறுவடை செய்வதுதான் தேர்தல் களப்பணி என நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் பலமுறை சுட்டிக்காட்டி இருக்கிறார். அதைத்தான் உங்களில் ஒருவனான நானும் மீண்டும் நினைவு படுத்துகிறேன்.

### ஒவ்வொரு வாக்கும் முக்கியம்!

**ஒவ்வொரு வாக்கும் மிகவும் முக்கியம். ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ என்பதை உறுதி செய்யும் உழைப்பை உடன்பிறப்புகள் வழங்கினால் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றி தான். அதைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்.**




**ஒற்றுமையாகவும் ஒருங்கிணைப்புடனும் உடன்பிறப்புகள் ஓயாது உழைக்கிறார்கள் என்ற செய்தி என் காதுக்கு வரும்போது எல்லாம் நான் உற்சாகத்துடன் உங்களை மிஞ்சும் உழைப்பை வழங்கும் ஆற்றலைப் பெறுகிறேன்.**

கொளுத்தும் வெயிலையும், கோடை மழையையும் பொருட்படுத்தாமல் களத்தில் பணியாற்றுகின்ற உடன்பிறப்புகளுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சலிக்காமல் உழைப்பதில் நம் உடன்பிறப்புகளுக்கு நிகர் யாருமில்லை என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கின்ற உங்கள் உழைப்பினால், தோழமைக் கட்சியினருடன் ஒருங்கிணைந்து நீங்கள் ஒற்றுமையாக ஆற்றுகின்ற பணியினால், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றியை உறுதி செய்து, இந்தியாவுக்கே வழிகாட்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சியை நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள் அமைத்துக் காட்டினார்கள் என்ற பெருமையை விட உங்களில் ஒருவனான எனக்கு வேறென்ன வேண்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### ஆசிரியர் கி.வீரமணி கடும் வெயிலிலும் பரப்புரை செய்கிறார்!

**92 வயது நிறைந்த திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி அவர்கள் கடும் வெயிலிலும் பரப்புரை செய்கிறார். அகவை 80–ஐ தாண்டிய அண்ணன் சிதம்பரமும், அண்ணன் வைகோவும் மூலைமுடுக்கெல்லாம் திராவிட மாடல் ஆட்சி மீண்டும் அமைய வேண்டும் என்பதன் அருமையை விளக்கி வருகின்றனர்.**

**87 வயதான நம் கழகப் பொதுச் செயலாளர் அன்பு அண்ணன் துரைமுருகன் அவர்களும், 28 வயதே ஆன அவிநாசி கழக வேட்பாளர் டாக்டர் கோகிலாமணியும் பம்பரமாகக் களத்தில் சுழன்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக கழகத்தினரும் தோழமைக் கட்சியினரும் பணியாற்றி வருகிறார்கள்.**

---

## மனித நேயமற்ற முறையில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும்

# பா.ஜ.க. கூட்டணியை தோற்கடிப்பீர்!

## மயிலை தொகுதியில் மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி பிரச்சாரம்!

சென்னை, ஏப்.13–

சந்தர்ப்பவாத அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியை மக்கள் தோற்கடிக்க வேண்டும் என்று மயிலையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தொகுதி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து பேசுகையில் மார்க்சிஸ்ட் தேசிய பொதுச்செயலர் எம்.ஏ. பேபி குறிப்பிட்டார்

சென்னை மயிலாப்பூர் மந்தைவெளியில் சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் மயிலாப்பூர் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் மயிலை த.வேலுவுக்கு வாக்கு சேகரித்து பேசியதாவது:

இந்தியா மாநிலங்களின் கூட்டமைப்பு என்கிறது அரசியலமைப்புச் சட்டம். ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசு மாநில உரிமைகளை பறிக்கிறது. மாநிலங்கள் அற்ற தேசத்தை உருவாக்க பா.ஜ.க. முயற்சிக்கிறது.

யூனியன் பிரதேசங்களை மாநிலங்களாக தரம் உயர்த்தும் நிலை மாறி, மாநிலங்களை யூனியன் பிரதேசங்களாக பா.ஜ.க. மாற்றுகிறது. இதே நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் தமிழகத்தைக்கூட மூன்றாக பிரிக்க பா.ஜ.க. முயற்சிக்கும்.

**ஆளுநர்கள் அராஜகம்!**

தற்போதைய ஆளுநர்கள் ஒன்றிய அரசின் முகவர்களாக செயல்பட்டு, மாநிலங்களின் ஜனநாயக உரிமைகளை முடக்கு



கின்றனர். பிரிட்டிஷ் கால ஆளுநர்கள் போல அராஜகமாக செயல்படுகின்றனர்.

மயிலாப்பூர் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளராக போட்டியிடுகிறவர் ஏற்கெனவே ஆளுநராக இருந்தவர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு எதிராக செயல்பட்டவர்.

அரசமைப்பு சட்டப்பதவி வகித்தவர்கள் மீண்டும் நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினராக போட்டியிடுவதில்லை. இதற்கு மாறாக அவர் போட்டியிடுவது மாண்பற்ற செயல்.

தமிழ்நாடு வெள்ள நிவாரணமாக ரூ.37,000 கோடியை கோரியபோது, நிதியை ஒதுக்காமல் ஒன்றிய அரசு வஞ்சித்தது. இதே போன்ற நிலைதான் கேரளமும் எதிர்கொள்கிறது.

தமிழகத்தின் கல்வித் துறைக்கு ரூ.3,548 கோடி, ‘ஜல் ஜீவன்’ திட்டத்துக்கு ரூ.3,112 கோடி வழங்காமல் வஞ்சிக்கிறது. எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களை நிதி ஒதுக்காமல் மனிதநேயமற்ற வகையில் வஞ்சிப்பது தொடர்கிறது.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஒதுக்கிய நிதியை விட சமஸ்கிருதத்துக்கு 23 மடங்கு அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னாள் முதல்வர் அண்ணா மாநில உரிமைகளுக்காக போராடியவர். அவர் பெயரை கொண்ட அதிமுக, மாநில உரிமைகளுக்கு எதிரான பா.ஜ.க. உடன் சந்தர்ப்பவாத கூட்டணி வைத்துள்ளது. அ.தி.மு.க. அணியை மக்கள் நிராகரிக்க வேண்டும் என்றார் அவர்.

கூட்டத்தில், மத்திய சென்னை மக்களவை உறுப்பினர் தயாநிதி மாறன், வேட்பாளர் த.வேலு, மார்க்சிஸ்ட் தென்சென்னை மாவட்டச் செயலர் ஆர்.வேல்முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

## கே.ஆர்.என். ராஜஸேக்குமார் பங்கேற்பு!

# இராசிபுரத்தில் மா.மதிவேந்தனை ஆதரித்து திருச்சி சிவா எம்.பி. பிரச்சாரம்!

நாமக்கல், ஏப். 13 –

நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் தொகுதிக்குட்பட்ட வெண்ணந்தூர் ஒன்றியம் அத்தனூர் அண்ணா சிலை மற்றும் மோகனூர் பேரூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில், திமுக வேட்பாளர் மா.மதிவேந்தனை ஆதரித்து கழகத் துணை பொதுச் செயலாளரும் மாநிலங்களவை குழு தலைவருமான திருச்சி சிவா எம்.பி கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் நலத்துறை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரும் ராசிபுரம் (தனி) தொகுதி வேட்பாளருமான மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற வேட்பாளர் கே.பி. இராணி, ஒன்றிய திமுக செயலாளர் ஆர். எம்.துரைசாமி, பேரூர் செயலாளர்கள் அத்தனூர் கே. கண்ணன், வெண்ணந்தூர் ஆர். எஸ்.எஸ்.ராஜேஷ் மோகனூர் ஒன்றிய செயலாளர் நவலடி பேரூர் செயலாளர் செல்லவேல் (ஏ) சி. செல்லப்பன் உள்ளிட்ட ஆகியோர் முன்னிலை வகித்தனர்=

கழகத் துணை பொதுச்செயலாளரும் மாநிலங்களவை குழு தலைவருமான திருச்சி சிவா எம்.பி கலந்து கொண்டு பேசுகையில், ”தேர்தல் என்பது திருவிழா அல்ல. வாக்குச்சாவடிகளில் செலவழிக்கும் சில நிமிடங்களே உங்கள் வருங்கால வாழ்க்கையை தீர்மானிக்கும். அனைத்து ஆட்சிகளையும் அனுபவ ரீதியாக மதிப்பீடு செய்து, நன்றாக யோசித்து உங்கள் வாக்கை பயன்படுத்த வேண்டும். ஏன் அந்த வாக்கை எங்களுக்கு தர வேண்டும் என்பதை விளக்குவதற்காகவே நாங்கள் வந்துள்ளோம் என்றார்.

”நாளை இதே இடத்தில் மற்ற கட்சிகளும் வரலாம். அவர்கள் பேசுவதையும் கேட்டுவிட்டு முடிவு எடுக்க வேண்டும். எல்லோரையும் சமமாக நடத்தும் இடம் வாக்குச்சாவடி தான். ஏப்ரல் 23ஆம் தேதி பணக்காரர், ஏழை, படித்தவர், படிக்காதவர் என அனைவரும் ஒரே வரிசையில் நிற்பார்கள். இந்த நாட்டின் ஓட்டு சீட்டு அனைவரையும் சமமாக நடத்துகிறது. அதை சரியாக பயன்படுத்தினால் அடுத்த ஐந்து ஆண்டுகள் நிம்மதியாக வாழலாம் எனக் கூறினார்.

---



**அ.தி.மு.க.வின் தலைமை நிலையம் டெல்லி பா.ஜ.க.; அதனால் விளைந்தது அடிமைத் தனமும், பொய்யும், புரட்டும்; தி.மு.க.வின் தலைமை நிலையம் அண்ணா அறிவாலயம்;**

**அதனால் விளைந்தது உரிமைக் குரலும், உண்மை உழைப்பும்; அண்ணாவின் தம்பி, உழைப்பின் உருவகம் ஸ்டாலின் தொடரட்டும்!**